2010 மே 4]

உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல அங்கிருந்து மாற்றுவதைவிட, அவர் கேட்கிற வடமாதிமங்கலத்திற்கு விடுதி தருவதற்கு வேண்டிய முயற்சிகள் எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன்.

திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளம் தொகுதி, சிவஞானபுரத்தில் அரசு உயர்நிலைப் பள்ளி 21 வருடங்களாகத் தொடர்ந்து 10 ஆம் வகுப்புத் தேர்வில் மாநிலத்திலே எந்தப் பள்ளிகளும் இல்லாத அளவிற்கு 100 சதவீதம் தேர்ச்சி பெற்று வருகிறது. 1,000 மாணவ, மாணவியர்கள் படித்து வருகிறார்கள். அத்தோடு, அங்கு படிக்கின்ற 1,000 மாணவ, மாணவியர்களில் 80 சதவீதம் பேர் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர்கள் படிக்கிறார்கள். ஆகையால் இந்த அரசு அங்கே ஒரு பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி அமைக்குமா என்று தங்கள்மூலம் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி தேவை என்பதை நானும் அறிவேன். அரசு உரிய முறையிலே பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 135, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

135—

மக்கள் நீதிமன்றம்

***10450—திரு. இரா. இராஜேந்திரன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொழிலாளர் நீதிமன்றங்களில் வழக்குகளை விரைந்து முடிக்க மக்கள் நீதிமன்றம் அமைத்திட அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்:

TRUTH ALONE TRIUMPHS

[2010 மே 4

தொழிலாளர் நீதிமன்றம் நிலுவையில் உள்ள வழக்குகளை விரைந்து முடித்து வருகிறது. எனவே, மக்கள் நீதிமன்றம் (Lok Adalat) அமைத்திட அவசியம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன்.

திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நீதிமன்றங்களில் தேங்கியுள்ள வழக்குகளை விரைந்து முடிக்க Lok Adalat என்கிற மக்கள் நீதிமன்றம் அமைத்திட அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 12 தொழிலாளர் நீதிமன்றங்களும், சென்னையில் ஒரு தொழிலாளர் தீர்ப்பாயமும் இயங்கி வருகிறது. எந்த மாவட்டத்தில் தொழிலாளர் நீதிமன்றத்தில் அதிக வழக்குகள் உள்ளனவோ, அங்கே மக்கள் நீதிமன்றம் அமைக்க அரசு, சென்னை உயர் நீதிமன்றப் பதிவாளருக்குப் பரிந்துரை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன்.

திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் பதிலுக்கு நன்றியைத் தெரிவிக்கிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 136, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

136—

நவீன நீரூற்று

***62021—திரு. அ. ராஜன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—